# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 97/2015

திரு. B. வெங்கட்டநாகரத்தினம்,
த/பெ S.A. பாலகிருஷ்ணன்,
10–A, V.A.P காம்ப்ளக்ஸ்,
பாலமுருகன் கோவில் தெரு,
மேலூர் – 625 106. ––– மேல்முறையீட்டாளர்
( திரு.B. வெங்கட்டநாகரத்தினம்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர்,
மதுரை – 625 007. ––– எதிர்மனுதாரர்
( திரு.P.குப்புரத்தினம், உதவி செயற்பொறியாளர்/தெற்கு/மேலூர்)

**கேட்புரை நாள் : 23–2–2016**

**ஆணை நாள் : 23–3–2016**

திரு. திரு. B. வெங்கட்டநாகரத்தினம், த/பெ S.A. பாலகிருஷ்ணன், மேலூர் அவர்களின் 9.12.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 97/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 23.2.2016 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் மற்றும் எதிர்மனுதாராரின் பதிலுரையிலுள்ள

வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட ஆவண நகல்களை கோரியுள்ளார்.

(i) முறையீட்டாளரின் பெயருக்கு உள்ள மின்இணைப்பு எண்.110–004–807க்கான நகல்

(ii) முறையீட்டாளரின் பெயருக்கு உள்ள காப்பு தொகைக்கான நகல்

(iii) எந்த வருடம் முறையீட்டாளரின் பெயரிலிருந்து திரு. சுப்பராயலு என்பார் பெயருக்கு மின்இணைப்பு மாற்றம் செய்யப்பட்டது. ஆதற்கான ஆவணங்களின் நகல்

(iv) திரு. சுப்புராயலு என்பவரால் மின் இணைப்பு எண்.110–004–807க்கான மின் பயனீட்டு கட்டணம் 26688/– செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ளது அதற்கான ஆவணம்.

(v) 1985–ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரை காப்பு தொகை செலுத்தியதற்கான அறிக்கையின் நகல்.

### 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மின் இணைப்பு எண்.110–004–807 தாழ் அழுத்த மின்கட்டண விகிதம் III-B என்ற வகையில் 28.17 KW அனுமதிக்கப்பட்ட மின்சுமையுடன் வழங்கப்பட்டுள்ளது.

2.2 மேல்முறையீட்டாளர், அவரும் அவரது தம்பி திரு. B. சுப்புநாகுலு அவர்களும் கூட்டாக இணைந்து வாடகை ஒப்பந்தம் செய்து 1985 முதல் சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில் என்ற பெயரில் மேற்கண்ட தாழ்வழுத்த தொழிற்சாலை மின்இணைப்பினை பயன்படுத்தி வந்ததாக தெரிவித்துள்ளார்.

2.3 மேற்கண்ட மின்இணைப்பு திரு. சுப்புராயுலு என்ற பெயருக்கு மாற்றம் செய்யப்பபட்டுள்ளது.

2.4 மேற்கண்ட மின்இணைப்பு எண். மின்கட்டண பாக்கி தொகை செலுத்தாததால் 12.9.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டு 20.6.2015 அன்று ஒப்பந்த முறிவு செய்யப்பட்டுள்ளது.

2.5 மேல்முறையீட்டாளர் அவரின் கோரிக்கையிலுள்ள ஆவணங்கள் வேண்டும் என்று மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 26.9.2015 அன்று மனு செய்துள்ளார். மன்றம் அவர் கோரிய ஆவணங்களின் ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் முறையீட்டாளருக்கு அளிக்கவேண்டும் என்று உத்தரவு இட்டுள்ளது.

2.6 மேல்முறையீட்டாளர் அவர் கோரிய பரிகாரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதால் மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

3.1 மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் அவரது கோரிக்கைளை தெரிவித்து மனுவை சமர்ப்பித்தார். அவர் கோரிக்கையின் பரிகாரம் இதுவரையில் கிடைக்கவில்லை. எனவே, அவருடைய மனுவிற்கு பரிகாரம் செய்து தரும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 மேல்முறையீட்டாளர் திரு. பி. வெங்கட்டநாகரத்தினம் அவர்கள் நடந்த 26.9.2015 அன்று நடைபெற்ற மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கதவு எண்.498 மேலூர் மெயின் ரோடு என்ற முகவரியில் மேல்முறையீட்டாளரும், அவரது தம்பி திரு. பி. சுப்புநாகுலு அவர்களும் கூட்டாக இணைந்து வாடகை ஒப்பந்தம் செய்து 1985ஆம் ஆண்டு முதல் சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில் என்ற பெயரில் தொழில் செய்வதற்காக தாழ்வழுத்த தொழிற்சாலை மின்இணைப்பினை (110–004–807) பெற்றதாகவும், பின்னர் 1993 முதல் 1996 ஆண்டில் மேற்கண்ட

மின்இணைப்பினை மேல்முறையீட்டாளரின் (திரு. பி. வெங்கட்நாகரத்தினம்) அனுமதியின்றி அவரது தம்பி திரு. சுப்புராயலு (உண்மையான பெயர் திரு. பி. சுப்புநாகுலு) தனது பெயருக்கு மாற்றம் செய்து கொண்டதாகவும் மேற்கண்ட சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில் தொடர்பான உரிமையியல் வழக்கு மேலூர் நீதிமன்றத்தில் (O.S. No. 81/12) தொடரப்பட்டு நிலுவையிலுள்ளதாலும், மேற்கண்ட உரிமையியல் வழக்கிற்காக பின்வரும் ஆவணங்களின் நகல்களை வழங்கிட வேண்டி முறையிட்டு மனுவினை பதிவு செய்துள்ளார்.

1) மேல்முறையீட்டாளர் (திரு. B. வெங்கட்டநாகரத்தினம்) அவர்கள் பெயருக்கு உள்ள மின்இணைப்பிற்கான ஆவண நகல்.

2) மேல்முறையீட்டாளர் (திரு. B. வெங்கட்டநாகரத்தினம்) அவர்கள் பெயருக்கு உள்ள டெபாசிட் தொகை செலுத்தப்பட்டதற்கான நகல்.

3) எந்த வருடம் திரு. B. வெங்கட்டநாகரத்தினம் பெயரை மாற்றி திரு. சுப்புராயலு பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது மற்றும் அதற்கான ஆவண நகல்.

4) திரு. சுப்புராயலு என்பவரால் மி.இ.எண். 110–004–807க்கான மின்பயனீட்டு கட்டணம் ரூ.26688/– செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாக தெரிவித்து 1985ஆம் ஆண்டு முதல் 1994ம்ஆண்டு வரை காப்பு தொகை செலுத்தியதற்கான அறிக்கையின் நகல்.

4.2 மேற்கண்ட மனு மீதான 26.9.2015 அன்றைய கேட்புரையில் மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணங்களின் நகல்களை கோருவதனால் அவற்றை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அவற்றை கண்டறிந்து சமர்ப்பிப்பதாகவும் மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே 30 தினங்களுக்குள் திரு.

B. வெங்கட்டநாகரத்தினம் கோரிய ஆவணங்களை அவருக்கு அளித்திட மதுரை மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் 26.9.2015 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டது.

4.3 அங்ஙனம், தேடும் பணியில் மேல்முறையீட்டாளர் (திரு. பி. வெங்கட்டநாகரத்தினம்), அவரது தம்பி திரு. பி. சுப்புநாகுலுவும் கடந்த 22.7.1994 அன்று செய்து கொண்ட எழுத்துப்பூர்வமான உறுதி மொழியின் நகல் மட்டுமே கிடைக்கப்பெற்றது எனவும், ஆனால், மேற்கண்ட மின்இணைப்பு வழங்கப்பட்ட போது பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பான ஆவணங்களும் இதர சில மின்இணைப்புகளுக்கான ஆவணங்களும் பிரிவு அலுவலகம் முதல் வருவாய் பிரிவு வரை எங்கு தேடியும் கிடைக்கப்பெறவில்லை என்பதனாலேயே மேல்முறையீட்டாளர் கோரிய ஆவணங்களின் நகல்களை வழங்க இயலவில்லை.

4.4 மேல்முறையீட்டாளர், அவரது தம்பி திரு. பி. சுப்புநாகுலுவும், கடந்த 22.7.1994 அன்று செய்து கொண்ட எழுத்துப்பூர்வமான உறுதி மொழியில் மேல்முறையீட்டாளர் மேற்கண்ட சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில்லில் தனக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும், மேற்கண்ட ஆயில் மில்லின் மின்இணைப்பிற்கான பெயரை திரு. சுப்புநாகுலு பெயரில் வைத்து நடத்திக் கொள்ள சம்மதிப்பதாகவும் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மட்டுமே திரு. சுப்புநாகுலு அவர்களால் மின்இணைப்பு எண்.110–004–807க்கு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்து அதன் அடிப்படையிலேயே பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், மின்இணைப்புகளின் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யும் பொழுது திரு. சுப்புநாகுலு என்பதற்கு பதிலாக திரு. சுப்புராயலு என தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

4.5 மேலும், மேற்கண்ட மின்இணைப்பானது கட்டண நிலுவை தொகை செலுத்தாத காரணத்தினால் 12.9.2013 அன்றிலிருந்து மின் துண்டிப்பு செய்யப்பட்டு கடந்த 20.6.2015ல் ஒப்பந்த

முறிவு செய்யப்பட்டு நிரந்தர மின்துண்டிப்பும் செய்யப்பட்டுள்ளது என்றும், மேல்முறையீட்டாளர் கோரிய ஆவணங்கள் எங்கு தேடியும் கிடைக்கப்பெறாத காரணத்தினால் மேல்முறையீட்டாளருக்கு அவற்றை வழங்க இயலாத நிலை உள்ளது என்பதனையும் மாண்புமிகு தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களின் பணிவான கவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.02.2016, அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. B.வெங்கட்டநாகரத்தினம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு.P.குப்புரத்தினம், உதவி செயற்பொறியாளர்/தெற்கு/மேலூர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர் திரு. B. வெங்கட்டநாகரத்தினம் அவர்கள், தான் கோரியுள்ள ஆவணங்கள் தனக்கு தரப்படவேண்டும் என்று வாதிட்டார்.

6.2 மேலும், மின்இணைப்பின் பெயர் மாற்றம் தன்னுடைய சம்மதம் இல்லாமல் தனக்கு தெரியாமல் செய்யப்பட்டுள்ளது என்று வாதுரை புரிந்தார்.

6.3 மேலும், தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதங்களை கேட்புரையின் பொழுது சமர்ப்பித்தார் அதில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) அவரும் அவருடைய தம்பி B. சுப்புநாகுலு இருவரும் பிரிவினையில்லாத பொது குடும்பத்தை சேர்ந்தவர்கள். அவர் PUC வரையில் தேர்ச்சி பெற்று உள்ளார். அவரது தம்பி சுப்புநாகுலு, B.Com., தேர்ச்சி பெற்று வேலையில்லாமல் இருந்து வந்தார். அதனால் அவரும் அவரது தம்பியும் சேர்ந்து சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் மூலமாக பிளவர் மற்றும் ஆயில் மில் இயக்க தீர்மானித்தனர். அதன் அடிப்படையில் அவர்கள் இருவரும் தனித்தனியாக மேலூர் லெட்சுமி விலாஸ் பாங்க் மூலமாக தலா ரூ.25000/– கடன் பெற்று அதனை மூலதனமாக வைத்து மேற்படி தொழில் நடத்துவதற்கு வேண்டிய மிஷினரியை வாங்கினார்கள்.

(ii) அதற்கு முன்பு தொழில் நடத்ததுவதற்காக அவருடைய சிறிய பாட்டனாரின் மகனாகிய திரு. S.V. பாலவாசுதேவன் என்பவரிடம் அவருக்கு பாத்தியத்திற்கு உட்பட்ட மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலூர் பழைய வார்டு 11க்கு கதவு எண்.498 தற்பொழுது வார்டு 6க்கு கதவு எண்.771 கட்டடத்தை 1.5.1985ம் தேதி உள்ள ரிஜிஸ்டர் வாடகை ஒப்பந்த பத்திரம் 10 வருடங்களுக்கு வாடகைக்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

(iii) அதன்பின்பு மேற்படி கட்டிடத்தை 1985ம் ஆண்டு ஜுலை 12ம் தேதி தொழிலை ஆரம்பித்தனர். அந்த தொழிலை அவர்கள் இருவரும் சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில் பெயரில் சர்க்காரின் பெர்மிட் பெற்றனர். மேலூர் நகராட்சியில் அனுமதி பெற்று மேலும் மேலூர் தமிழ்நாடு மின்வாரியத்தில் அவர் மனு கொடுத்து அதன்பேரில் அதாவது அவர் பெயரில் B. வெங்கட்டநாகரத்தினம் பெயருக்கு 110–004–807 கிழக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது. அதன்படி 1994ம் ஆண்டு வரை மேற்படி மின்இணைப்பு அவர் பெயரிலேயே இருந்து வந்தது. அவர் பெயரிலேயே மின்கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது.

(iv) அதன்பிறகு 1992ஆம் ஆண்டு அவர் வெளியூரில் இருந்ததைதை பயன்படுத்தி கொண்டு அவர் பெயரிலிருந்த மின்இணைப்பை அவருக்கு தெரியாமலும் அவர் சம்மதம் இல்லாமலும் மேற்படி

மின்இணைப்பை அவர் தம்பி பெயருக்கு மாற்றுவதற்கு அவர் ஒரு உறுதிமொழி பத்திரத்தில் கையொப்பம் இட்டதாகவும் பொய்யாகவும் மோசடியாகவும் கூறி அவருக்கு எவ்வித அறிவிப்பு கொடுக்காமலும் விசாரணை செய்யாமலும் ரகசியமாகவும் மோசடியாகவும் அவர் பெயரிலிருந்து மேற்படி இணைப்பை (807 கிழக்கு) அவர் தம்பி பெயருக்கு மாற்றி விபரம் அவர் முன்சீப் கோர்ட்டில் (O.S. No. 81/12) ல் தாக்கல் செய்த வழக்கில் அவர் தம்பி statement தாக்கல் செய்த பின்பு தான் தெரியவந்தது. அவர் பெயரிலுள்ள மின்இணைப்பை அவரின் தம்பி பெயருக்கு மாற்றுவதற்கு எவ்வித கையெழுத்தும் ஆவணமும் எழுதிதரவில்லை. சம்மந்தப்பட்ட மின் இணைப்பு ஆவணங்கள் முதலில் இருந்து இன்று வரை K. புதூர் ஆபிஸில் உள்ளது. அதனை கண்டுபிடித்து ஆவண செய்யவேண்டும்.

(V) அதன்பேரில் K. புதூர் ஆபிஸில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மேற்பார்வை பொறியாளர் அவர்களிடம் புகார் மனு கொடுத்து அவர் பெயருக்கு திரும்பவும் மாற்றவேண்டும் என்று கோரியிருந்தார். அதற்கு அவர்களிடமிருந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால், அவரின் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிக்கிறது. அவருடைய கோரிக்கைக்கு ஆதரவாக இதன் அடியில் கண்ட தஸ்தாவேஸுகளின் நகல்களை சமர்ப்பித்துள்ளார்.

1) 12.7.1985ம் தேதிய வாடகை ஒப்பந்தப் பத்திர நகல்

2) சர்க்காரால் வழங்கப்பட்ட சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில் பெர்மிட் நகல்

3) தொழில் வரி ரசீது நகல்

4) O.S. No. 81/2012 பிராது நகல்

5) O.S. No. 111/2015 பிராது நகல்

6) மோட்டார் லைசன்ஸ் வரி நகல்

7) தொழிலாளர் ஆய்வாளர் (படிக்கல், தராசு ) நகல்

8) ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் நகல்

9) ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் சட்டம் பிரிவு 8 மற்றும் விதி 25ன் படி சர்டிபிகேட் (உரிமை காலம் 1.4.2006 முதல் 31.3.2007 வரை ) நகல்

10) திரு. B.வெங்கட்டநாகரத்தினம் ஆகிய அவரின் பெயரில் சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில்லுக்கு வழங்கப்பட்ட மின்இணைப்பை அவருக்கு தெரியாமல் அவரது தம்பி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அறிந்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்து திரும்பவும் மின்இணைப்பை அவர் பெயருக்கு மாற்றித்தரும்படி எழுதிய மனு நாள் 26.9.2015 விண்ணப்பத்தின் பதிவு எண்.018/2015 நகல்.

11) அவர் பெயரில் 15.3.1999ம் தேதி மேலூர் மின்பகிர்மான வட்டம் சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில் (110–004–807 கிழக்கு) க்கு கட்டிய மின்கட்டண ரசீது நகல்

6.4 ஆகையால் கனம் மின்குறைதீர்ப்பாளர் அவர்கள் அவருடைய ஆவணங்களையும், வாதங்களையும் நன்கு பரிசீலித்து மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், மேலூர் மெயின்ரோட்டில் பழைய கதவு எண்.498 தற்போதைய எண்.771ல் இயங்கி வந்த ‘‘சஞ்சீவி பிளவர் மற்றும் ஆயில் மில்’’ மின்இணைப்பு எண்.110–004–807(கிழக்கு மேலூர்) என்ற மின்இணைப்பை திரும்பவும் அவர் பெயருக்கு மாற்றி அளிக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறார்.

## 7. <u>கேட்புரையின் பொழுது எதிர் மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 எதிர்மனுதாரரின் சார்பில் திரு. பி. குப்புரத்தினம், உதவி செயற்பொறியாளர், தெற்கு மேலூர் அவர்கள் கலந்து கொண்டு எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 உதவி செயற்பொறியாளர், தெற்கு மேலூர் அவர்கள் மின்இணைப்பு எண்.100–004–807 சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் கோரும் ஆவணங்கள் 20 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதால் அலுவலகங்களில் தேடியபொழுது திரு. B. வெங்கட்டநாகரத்தினம் அவர்களும் அவரது தம்பி B. சுப்புநாகுலுவும் 20.7.1994ல் செய்து கொண்ட எழுத்துப்பூர்வமான உறுதி மொழியின் நகல் மட்டும்தான் கிடைக்கப்பெற்றது என்றும், ஆனால், மின்இணைப்பு வழங்கும் பொழுது பெறப்பட்ட ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யும் பொழுது உள்ள ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும், எனவே, அவர் கோரிய ஆவணங்களின் நகல்கள் வழங்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

7.3 மேலும், அந்த மின்இணைப்பில் உள்ள காப்புத்தொகை ரூ.46818/– என்றும், அந்த மின்இணைப்பல் மின்கட்டணம் ரூ.26688/– கட்டப்படவில்லை என்பதால் 12.9.2013 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டு அந்த மின்இணைப்பின் ஒப்பந்தம் (agreement) 20.6.2015 அன்று ரத்து செய்யப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தார்.

7.4 மேலும், தன்னுடைய 29.2.2016 கடிதத்தில் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு எண்.110–004–807ல் உள்ள காப்புத்தொகை சம்பந்தமான வசூல் செய்த விபரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 மேல்முறையீட்டாளர், மின்இணைப்பு எண்.110–004–807ல் சம்பந்தப்பட்ட அவரின் கோரிக்கையிலுள்ள ஆவணங்கள் கோரியிருந்தார்.

8.2 எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளர் கோரிய மின்இணைப்பு எண்.110–004–807 சம்பந்தமாக கோரும் ஆவணங்கள் 20 வருடத்திற்கு முந்தியவை என்பதால் அலுவலகத்தில் தேடி

பார்த்தும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் மேலும், கீழ்கண்ட இரண்டு ஆவணங்கள் மட்டும் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

(i) மேல்முறையீட்டாளர் திரு. B. வெங்கட்நாகரத்தினம் அவர்கள் அவரது தம்பி B. சுப்புநாகுலுக்கு ஆயில் மில் சம்மந்தமான மின்இணைப்பு எண்.E807 ஐ பெயர் மாற்றம் முதலானவைகளை B. சுப்புநாகுலு பெயரில் வைத்து நடத்தி கொள்ள முழுமனதுடன் சம்மதிக்கிறேன் என்றும், பிளவர் மற்றும் ஆயில் மில்லில் எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும் உறுதி அளித்துள்ள பத்திரம்.

(ii) consumers current consumption deposit ledger cum Register-ன் மின்இணைப்பு எண்.807 உள்ள பக்கத்தின் நகல் (இதில் 2003–04 முதல் 2010–11 வரையிலான காப்புத்தொகை கணக்குகள் உள்ளன)

8.3 எதிர்மனுதாரர், மேற்கண்ட மின்இணைப்பு எண். சம்மந்தப்பட்ட ஆவணங்கள் சுமார் 20 வருடத்திற்கு முற்பட்டவை என்றும், மேல்முறையீட்டாளர் கோரும் எந்தவிதமான ஆவணங்களும் தங்களின் அலுவலகத்தில் தேடியும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து, எனவே, ஆவணங்கள் வழங்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளதால், அலுவலகத்தில் தேடியும் கிடைக்காத ஆவணத்தை எதிர்மனுதாரர் வழங்கவேண்டும் என்று உத்தரவிட முடியாத நிலை உள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளர் கோரிய பரிகாரம் வழங்க இயலவில்லை. இருந்தபோதிலும், எதிர்மனுதாரர், மேற்கண்ட ஆவணங்களை அலுவலகத்தில் தேடி, அவை கிடைத்தால் மேல்முறையீட்டாளருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

8.4 எதிர்மனுதாரரும், ஆவணங்கள் இல்லை என்று தெரிவிக்கும் நிலை வராமலிருக்க தேவையான நடவடிக்கைகள் எடுத்து இனிவருங்காலங்களில் ஆவணங்களை பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

8.5 மேலும், இந்த மேல்முறையீட்டாளர், 110–004–807 என்ற மின்இணைப்பினை மீண்டும் அவரின் பெயருக்கு மாற்றித்தரவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

8.6 மேற்கண்ட கோரிக்கை அவர், மதுரை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள 26.9.2015 நாளிட்ட முறையீட்டில் இல்லை. மின்குறைதீர்ப்பாளர், ஒரு மேல்முறையீட்டு அலுவலர் என்பதால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்த கோரிக்கைகளுக்குதான் மேல்முறையீட்டில் விசாரித்து தீர்வு வழங்க இயலும். எனவே, மேற்கண்ட கோரிக்கையை பரிசீலித்து மின்குறைதீர்ப்பாளர் தீர்வு வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 9. <u>முடிவுரை</u>

9.1 எதிர்மனுதாரர், மேற்கண்ட மின்இணைப்பு எண். சம்மந்தப்பட்ட ஆவணங்கள் சுமார் 20 வருடத்திற்கு முற்பட்டவை என்றும், மேல்முறையீட்டாளர் கோரும் எந்தவிதமான ஆவணங்களும் தங்களின் அலுவலகத்தில் தேடியும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து, எனவே, ஆவணங்கள் வழங்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளதால், அலுவலகத்தில் தேடியும் கிடைக்காத ஆவணத்தை எதிர்மனுதாரர் வழங்கவேண்டும் என்று உத்தரவிட முடியாத நிலை உள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளர் கோரிய பரிகாரம் வழங்க இயலவில்லை. எனினும், எதிர்மனுதாரர், மேற்கண்ட ஆவணங்களை அலுவலகத்தில் தேடி, அவை கிடைத்தால் மேல்முறையீட்டாளருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

9.2 மேற்பார்வை பொறியாளர், மதுரை மின் பகிர்மான வட்டம் அவர்கள், இதுபோன்று ஆவணங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கும் நிலை வருங்காலங்களில் ஏற்படாதிருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்.

9.3 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின்இணைப்பு எண்.110–004–807–ஐ அவரின்பெயருக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்த மனுவில் இடம் பெறவில்லை என்பதால் அந்த கோரிக்கையை மேல்முறையீட்டில் பரிசீலிக்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.4 மேற்கண்ட தீர்வுகளுடன் மேல்முறையீட்டு மனு எண்.97/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ஆ. தர்மராஜ்)
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. B. வெங்கட்டநாகரத்தினம்,
த/பெ S.A. பாலகிருஷ்ணன்,
10–A, V.A.P காம்ப்ளக்ஸ்,
பாலமுருகன் கோவில் தெரு,
மேலூர் – 625 106.

2) மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர்,
மதுரை – 625 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர், மதுரை – 625 007.

4)தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5)  செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19–A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

6)   உதவி இயக்குநர் (கணினி)  –    மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.